979 மார்ச் 31] [திரு. கா ந. சண்முகம்]

அடுத்து, விராகாலூர் ஏரியில் உடைப்பு ஏற்பட்ட போது, அதற்காக ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்து உடைப்பை சரிபடுத்தியிருக்கிறோம். இதற்கு செலவாகும் தொகையை கணக்கிட்டுப் பார்க்கும்போது, இந்த கரையை நல்லமுறையில் அகலப்படுத்தி, உயர்த்தினால் விராகலூர் பகுதி மக்களுக்கு பாதுகாப்பாக இருக்கும். நானும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும் இங்கே போய் பார்த்த போது, உண்மையி லேயே மிகவும் கஷ்டமாக இருந்தது. (மணியடிக்கப்பட்டது) இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

அடுத்து, பெருவளை வாய்க்கால் சீரமைத்தலைப் பொறுத்த வரையில், இப்போது மிகவும் சீரழிந்த நிலையில் இருக்கிறது. இதன் கடைக்கோடியில் இருக்கும் சங்கேத்தி ஏரியை ஆழப் படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இதன் மூலம் 2,000 ஏக்கருக்கு பாசன வசதி கொடுக்க முடியும். இதையும் நிறைவேற்றித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஆலங்குடி மஹாஜனம் ஏரியை ஆழப்படுத்த வேண்டும். பங்குனி வாய்க்கால் என்று ஒன்றிருக்கிறது. பெயர் தான் பங்குனி வாய்க்கால், இதன் மூலம் 20,000 ஏக்கா பாசன வசதி பெறுகின்ற நிலைமை இருக்கிறது. இதில் குமிழி கட்டிக் கொடுத்தால் உடனடியாக 15 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெற முடியும். இதையும் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே ஆலங்குடி மஹாஜனம் ஏரியையும் சீரமைத்து, பங்குனி வாய்க்காலின் குமிழியையும் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அன்பிலுக்கு அருகாமையில் உள்ள செங்கரையூர் வாய்க்காலை சீரமைத்துக் கொடுத்தால் 2,000 ஏக்கர்கள் பாசனவசதி பெற முடியும். இப்போது அந்த வாய்க்கால் மேடிட்டு கிடக்கிறது. இதை சீரமைப்பு செய்து, இங்கே தண்ணீர் வரும் என்று அங்குள்ள மக்கள் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதையும் நிறைவேற்றிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டுமுடித்துக் கொள்கிறேன்.

2. ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(ஆ) அவையில் அமைச்சர்களால் அறிவிக்கப் பெறவேண்டிய கொள்கைப் பிரச்சினைகளை அதிகாரிகள் நாளேடுகளுக்கு முன்கூட்டி அறிவிப்பது குறித்து.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, 242ஆவது விதியின் கீழ் தங்களின் மேலான கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வருகிறேன். இரண்டு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன். நான்

ஏற்கனவே எழுப்பிய பிரச்சினைக்கு தாங்கள் தீர்ப்பு அளித்துவிட்டீர்கள். அதற்கப்புறம் என்னால் பேச முடியாது. அதை தாங்கள் மறுபரிசீலனை செய்வதற்காக என்னுடைய கருத்தை விதி 242–ன் கீழ் தெரிவிக்கிறேன். இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் மீது ஒரு பிரிவிலேஜ் கொடுத்திருந்தேன். அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்ததற்குப்பின்னால் எனக்குப் பேசுவதற்கு அன்றையதினம் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இப்போது. . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> தீர்ப்பு அளித்துவிட்ட பிரச்னையைப்பற்றி இப்போது பேச வேண்டாம். புதிதாக ஏதேனும் இருந்தால் சொல்லுங்கள்.

<u>திரு. க. சுப்பு :</u> அதைத்தான் சொல்லுகிறேன். டைரக்டர் ஜெனரல் என்று ஏற்படுத்துவதாக இருக்கின்ற அரசின் திட்டத்தைத்தான் ஐ.ஜி. தெரிவித்தார் என்று அமைச்சர் அவர்கள் அன்றைக்கு சொன்னார்கள்: ஆனால், முதலமைச்சர் அவர்கள் இதைப்பற்றி எதுவும் சொல்லவில்லை. எந்த ஒன்றும் பண்ணவில்லை. இதைக்குறித்து நிருபர்கள் முதலமைச்சர் அவர்களிடம் கேட்டு, கார்னர் பண்ணி கேட்டு, இது அரசாங்கத்தினுடைய கொள்கையா என்று கேட்டிருக்கிறார்கள். அதுபற்றி தகவல் எதுவும் இல்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஒரு அதிகாரியே அரசாங்கத்தின் பாலிசி இல்லாமல் இருக்கும்போது, அதைச் சொல்வது சரியல்ல. ஆகவேதான் நான் அவர்மீது உரிமைப் பிரச்னை கொண்டு வந்திருந்தேன். அதிகாரிகள் இப்படியெல்லாம் நடந்து கொண்டால் தாங்கள் தான் இதற்கு முடிவு கூற வேண்டும்.

[முற்பகல் 11–40]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்.</u> கனம் உறுப்பினர் சுப்பு அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னை கிளப்பினார்கள். நான் கொடுத்த தீர்ப்பினை மதிப்பதாகவும், ஆனால் ஒரு போலீஸ் அதிகாரி ஐ.ஜி. அவர்கள் இன்றைக்குகூட அது பத்திரிகையிலே வந்திருக்கிறது என்றும், இந்த அவை நடக்கின்றபோது அமைச்சர் அவர்களாலே சொல்லப்பட வேண்டிய கொள்கை பிரச்னைகளை அதிகாரிகள் வெளியிலே சொல்லலாமா என்று ஒழுங்குப் பிரச்னை கிளப்பியிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே பல முறை தீர்ப்புகளும், அறிவுரைகளும் தந்திருக்கிறேன். அமைச்சர்கள் ஆனாலும் சரி, மற்ற அதிகாரிகள் ஆனாலும் சரி, பேரவை நடந்து கொண்டிருக்கின்ற போது, கொள்கைப் பிரச்னை அல்லது கருத்துக்கள் சொல்லவேண்டுமானால், இந்த அவையிலேதான் சொல்லவேண்டும் என்று முன்பே சொல்லியிருக்கிறேன்

அதேபோன்று இப்போது இன்றைக்கு பத்திரிகையிலே வந்திருப்பதைப் பற்றி சுப்பு அவர்கள் கொண்டு வந்திருக்கின்றபோது,

நான் சொல்கிறேன். எந்த அதிகாரியும் ஒரு பேரவை நடந்து கொண்டிருக்கின்றபோது எந்தப் புதிய கொள்கைப் பிரச்னையையும், நடைமுறைப் பிரச்னையையும் சொல்லுகிறபோது, இந்த அவையில் அமைச்சர் மூலமாகச் சொல்லவேண்டும் என்பது மரபு. ஆகவே, கப்பு அவர்களின் யோசனையை ஏற்றுக் கொள்வதோடு, மேற்கொண்டு இம்மாதிரி அல்லாமல், பேரவை நடக்கின்றபோது இப்படிப்பட்ட கொள்கைப் பிரச்னைகளை, நடைமுறைப் பிரச்னைகளை வெளியிலே சொல்லாமல் இருப்பது நல்லது என்று என் தீர்ப்பாக அளிக்கிறேன்.

8 வரவு-செலவுத் திட்டம் 1979-80
வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

புலவர் கா. கோவிந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாமன்றத்தில் வேளாண்மை-பாசனம் ஆகிய இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீது தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பினை மேற்கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக முக்கியமான இரண்டு பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதிலே அவர்கள் பெருமைப்பட வேண்டும். தமிழ்நாட்டு மக்களுக்கு அரசு செய்ய வேண்டிய தலையாய கடமைகளில் ஒன்றாக உணவு அளிப்பதை மேற்கொண்டிருக்கிறது. பசியையும் பிணியையும் அகற்றுவதற்கு உணவு அளிக்க வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்திலே, அதைப் பற்றி மிகச் சிறப்பாக இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இப்படிச் சொல்லுகின்ற நேரத்தில், இந்த உணவுக்கு முக்கியமாக இருப்பது நிலமும், நீரும்தான். அந்த நிலத்தையும் நீரையும் கொண்டு உற்பத்தி செய்பவன் உழவன்தான். எனவே, உழவன்தான் இந்த நாட்டிலே சிறந்தவன் என்ற கருத்தை நம்முடைய தமிழகம் உணர்ந்திருக்கின்ற ஒரு உண்மையாகும். அந்த நிலையிலே தான் இந்த அரசு தமிழ்நாட்டு மக்களுக்கு உணவு அளிக்கின்ற இந்த உயர்ந்த குறிக்கோளை மனதிலே வைத்து, இந்த ஆண்டு 88.73 லட்சம் டன் நெல் உற்பத்தி செய்வதென்றும், 36.45 லட்சம் டன் பணப்பயிர் விளைவிப்பதென்றும், 4.4 லட்சம் டன் பருத்தி உற்பத்தி செய்வது என்ற குறிக்கோளை அறிவித்திருக்கிறது. இந்த அறிவிப்பு நாட்டிலே வரவேற்கக்கூடிய ஒன்றாகும். ஆனால், இதை எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள்? எப்படி இந்தக் குறிக்கோளை அடையப்போகிறீர்கள் என்பதை எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில், அதற்கு சில வழிமுறைகளை அமைச்சர் அவர்கள் இந்தக் கொள்கை விளக்கத்திலே அறிவித்திருக்கிறார்கள். விவசாயிகள் சாகுபடியை சிறந்த முறையிலே மேற்கொள்வதற்காக, பொறுக்கு விதைகள் அளிப்பது, அவர்களுக்கு வேண்டிய உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவை மானியமாகவும், விலை குறைத்தும் வழங்குவது ஆகிய இவற்றோடு, நீர்ப்பாசன வசதியும் அளிப்பது. அதே போல் மண்